யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
Jaffna National College of Education - News letter

# குருதீபம்

ගුරුදීපම්

Gurutheepam

சித்திரை--2023 சிறப்பிதழ்



## பீடாதிபதியின் வாழ்த்துரை

ஒருவருடைய ஓய்வுக் காலத்தின் மகிழ்ச்சியென்பது தனது சேவைக் காலத்தில் ஆற்றிய சேவைகளின் திருப்தியின் அளவிலேயே தங்கியுள்ளது.

திரு.திருச்சபேசன், பன்முக ஆளுமை கொண்ட கல்வியியலாளர் என்பதற்கு அப்பால் தனது அடையாளத்தை தனது ஆற்றல் வெளிப்பாடுகளின் மூலம் நிலை நிறுத்தியவர். எமது கல்லூரியில் சிறிது காலம் சேவையாற்றினாலும் பல உயர்வான சேவைகளை ஆற்றியுள்ளார். வாண்மைத்துவப் பாடங்களில் புலமை பெற்ற இவர் இத்தோடு மட்டும் நின்றுவிடாது இரண்டாம் மொழியான சிங்களத்தைப் போதிப்பதிலும் மொழிபெயர்ப்புச் செய்வதிலும் பின்னிற்பதில்லை.

அந்த வகையில் அவருடைய அறுபதாவது அகவையில் மணிவிழா கொண்டாடுதல் சிறப்பானதாகும். வயது காரணமாக இவர் மணிவிழா காண்பினும் இவருடைய சேவை கல்விப் புலத்தின் நலனுக்கு இன்னமும் தேவை என்று கூறி அவரை, நான் வாழ்த்தி சீர்சிறப்பு மிக்க ஆரோக்கியம் மிகு எதிர்கால வாழ்வு பெற இறைவனை வேண்டியும் அவரின் செயற்பாடுகளுக்கெல்லாம் உறுதுணையாகச் செயற்பட்ட அவரது மனைவி,பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துக்களையும் இறையாசிகளையும் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் தனிப்பட்ட ரீதியிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீடாதிபதி,

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்,

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

உயர் திரு.வேல்நாயகம் திருச்சபேசன் அவர்களின் அகவை 60 நிறைவில் வெளிவருகின்ற குருதீபம் சிறப்புச் செய்திமடல்!



## மணிவிழா நாயகன்

திரு.வேல்நாயகம் திருச்சபேசன்
சிரேஷ்ர விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## மணிவிழா நாயகனை வாழ்த்தி மகிழ்கின்றோம்




This News letter was published by Jaffna National College of Education, Kopay on 04th April 2023

### போசகர்

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

### ஆலோசகர்கள்

செல்வி.செ.செல்வமலர்
திரு.தி.ஜெயகாண்டீபன்
உப பீடாதிபதிகள்

### பிரதம ஆசிரியர்

திரு.ம.நிரேஸ்குமார்

### இணை ஆசிரியர்கள்

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

### வெளியீடு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk

தமக்கு கிடைத்த வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்தி உயர்ந்த
திரு.வேல்நாயகம்.திருச்சபேசன் அவர்கள்



பன்முக ஆளுமை ,கண்டுபிடிப்பாளர் ,ஆராய்சியாளர் தேடல் கொண்ட நல்ல மனிதர்
திரு.வேல்நாயகம்.திருச்சபேசன் அவர்கள்





This News letter was published by Jaffna National College of Education, Kopay on 04th April 2023

**சிங்கள மொழியில் பல்தேர்ச்சி கொண்டவரும் அம் மொழியை மாணவ ஆசிரியர்களுக்கு கற்றுக் கொடுப்பதில் வல்லவருமான எங்கள் திரு.வே.திருச்சபேசன் அவர்கள்**





**மாணவ ஆசிரியர்களை ஊக்கப்படுத்துவதில் பின்னிற்காத எங்கள் திரு.வே.திருச்சபேசன் அவர்கள்**









**கல்லூரியின் பழுதடைந்த இருக்கைகளை புனரமைத்த பெருமை எங்கள் திரு.வே.திருச்சபேசன் அவர்களையே சாரும்.**













சிரேஷ்ர கல்வியியலாளர் திரு.வேல்நாயகம் திருச்சபேசன் அவர்களை கல்லூரிச் சமூகம் வாழ்த்திய தருணங்கள் 17.03.2023













எமது கல்லூரியின் பீடாதிபதி அவர்களின் தலைமையில் கல்வியியலாளர் கழக ஏற்பாட்டில் சிரேஷ்ர கல்வியியலாளர் திரு.வேல்நாயகம் திருச்சபேசன் அவர்களின் பணிநயப்பை வியந்து சிறப்புற நடைபெற்ற நிகழ்வுகளின் பதிவுகள் 20.03.2023
















## எங்கள் திரு.வேல்நாயகம் திருச்சபேசன் ஐயாவை வாழ்த்தும் நல் உள்ளங்கள் சில...

அன்பான உறவுப் பாலத்தின்
அரவணைப்பில் நீயும்
ஆறுபத்தை நிறைவு செய்தே
அடுத்தவடி வைத்தாய்!

இன்றுன்றன் பிறந்தநாளில்
மனம் நிறைந்த வாழ்த்தை
இன்றமிழில் சொல்லிடுவேன்
ஏற்றுக்கொள் வாயடீ சபேசா.

என்றும் நீ உடல் நலமும் உள நலமும் பெற்றே
எழுகதிராய்க் கல்லூரி வானில்
இரண்டாம் மொழி சிறக்க
இன்புற்று வர வேண்டும்!

பொன்போலும் மிக்கொளிரும்
பண்பிலுயர் சபேசரே
புவனத்தில் பேரோடும்
புகளோடும் வாழி!!

சித்தமெலாம் குழுகாய
நலந்தன்னை நாடும்
கல்வி சீர்திருத்தும் எண்ணத்தில்
அது குறித்தே பாடும்!

சகலவழிநின்றும் அறிவுரைகள்
சொல்லும் முத்து நீ

முப்போதும் முழு வீச்சில்
நடக்கும்
உன் கலையை கல்லூரி கதிர்கள்
காலத்தால் உய்க்கும்
தித்திக்கும் மாணவ ஆசிகளால்
நீயும்
சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு வாழி!!

**அன்பான பொன்.விஜய்**










This News letter was published by Jaffna National College of Education, Kopay on 04th April 2023